
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1202**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**115**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## தமிழ்த்தாயின் வளர்ச்சிக்கு உயிர்த்தியாகம் செய்வோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வட ஆற்காடு மாவட்ட 3-வது மாநாடு, 1957-ஆம் ஆண்டு, செப்டம்பர் 21, 22 ஆகிய இரண்டு நாட்கள் திருவண்ணாமலையில் நடைபெற்றது. முதல் நாள் இந்தி எதிர்ப்பு மாநாடாகவும், இரண்டாவது நாள் அரசியல் மாநாடாகவும் நடைபெற்றது. மாநாட்டையொட்டி திருவண்ணாமலை நகர் முழுவதும் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும், வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டு அழகுற்றிருந்தன. வெளி மாவட்டங்களில் இருந்தும் எண்ணற்றோர் வருகை தந்தனர். முதல் நாள் காலை 8.30 மணிக்கு பிரம்மாண்ட ஊர்வலம் நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட காரில் முன்னணித் தலைவர்கள் அழைத்துச் செல்லப்பட, பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள் முழக்கம் எழுப்பியவாறே பின்னால் இருவண்ணக் கொடியேந்தி அணிவகுத்து வந்தனர்.

மாநாடு தொடங்கியதும் முல்லை சக்தி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சி.வி.எம்.அண்ணாமலை மாநாட்டைத் திறந்துவைத்து, இந்தி எதிர்ப்பு நோக்கங்களை விளக்கினார். மாநாட்டுக்குத் தலைமையேற்ற சுவாமி அருணகிரிநாதர், “தமிழ்நாட்டுக்கு இந்தி பொது மொழியாகத் தகுதியல்ல என்ற போரைச் செய்வதற்காகக் கூட்டியுள்ள இந்த மாநாட்டிற்கு என்னைத் தலைமையாக இருந்து நடத்துமாறு மாலை போட்டு விட்டிருக்கிறார்கள். ஏனென்றால், பலிகடாவுக்கு முதலில் வேப்பஞ்சோலை கட்டுவது, கழுத்திலே மாலை போடுவது, குங்குமப்பொட்டு வைப்பது வழக்கம். அதுபோல தமிழ்த்தாய்க்காக நீ பலியாகு, தமிழ்த்தாயினுடைய வளர்ச்சிக்காக உன்னுடைய உயிரைத் தியாகம் செய். பின்னால், இளைஞர்களும் தியாகம் செய்ய காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதாக மாலை போட்டு விட்டிருக்கிறார்கள். வீட்டைத்தான் துறந்து சென்றேன். என் தாய்நாட்டை, தாய்மொழியை, என்னுடைய இனத்தைத் துறந்து சென்றுவிடவில்லை” என உரையாற்றினார்.

இந்தித் திணிப்புக்கு எதிரான முதல் போரிலும் பங்கெடுத்தவர் என்பதால், அந்த அனுபவங்களையும் மாநாட்டில் குழுமியிருந்த இளைஞர்களுக்கு மிகவும் உணர்வு பூர்வமாக எடுத்துரைத்தார், சுவாமி அருணகிரி நாதர். கேர் கமிட்டி மூலம் இந்தியைத் திணிக்கும் முயற்சிகளுக்குக் கண்டனம் தெரிவித்து, முதல் நாள் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது நாள், அரசியல் மாநாட்டையும் சி.வி.எம்.அண்ணாமலை தான் திறந்து வைத்தார். அன்பில் தருமலிங்கம் அரசியல் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் மற்றும் கழக முன்னணி நிர்வாகிகள் பலரும் உரையாற்றினர்.

கழகம் பங்கெடுத்த முதல் தேர்தலிலேயே வாக்களித்து, கணிசமான எண்ணிக்கையில் வெற்றி வாய்ப்பை வழங்கிய 17 லட்சம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தும், முதுகுளத்தூர் கலவரத்திற்குக் கவலை தெரிவித்தும், ‘ஐந்தாண்டுத் திட்டம்’ என்ற பெயரில் வட நாட்டுக்கு மட்டும் பெருந்திட்டங்களை வாரி வழங்குகிறது காங்கிரஸ் அரசு என்றும், விலைவாசி உயர்வைக் கண்டித்தும், ‘சென்னை ராஜ்யம்’ என்ற பெயரை ‘தமிழ்நாடு’ என மாற்றக்கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நங்கவரம் அறப்போரில் வெற்றிகண்ட உழவர்களுக்குப் பாராட்டும், அவர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெறக்கோரியும், கைத்தறி நெசவாளர்கள், பீடித்தொழிலாளர்கள், சர்க்கரை ஆலை, பட்டுத் தொழிலாளர்கள் மற்றும் ஓராசிரியர் நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, அவை தொடர்பாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. கழகத்தின் கொள்கைகளைச் சிற்றூர்களிலும் பரப்பிட ஏதுவாக, நாடகக்குழு ஒன்றை அமைக்க வேண்டுமென பொதுச் செயலாளருக்கு வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**...கூட்டம் திரளும்**

## தி.மு.க.வின் தேவை, இந்த நாட்டுக்குத் தேவை!

தி.மு.க.வின் தேவை, இந்த நாட்டுக்குத் தேவை என்ற வலியுறுத்தலோடு, அமுதன் என்பவர் சமூக வலைதளத்தில் எழுதிய பதிவு, பலராலும் பகிரப்பட்டுள்ளது. அந்தப் பதிவில் இருந்து...

“இந்தத் தோல்வி புதிதல்ல. இனியும் தி.மு.க. வெகுண்டெழும். அதற்கான தேவை இன்னும் இருக்கிறது.

தி.மு.க. தோற்றதற்கு வெளியே சொல்லப்படும் காரணங்கள் நிறைய இருக்கலாம். ஊழல், போதை, பெண் பாதுகாப்பு என்பன யாவும் ஆதாரமற்றவை என்று ஏற்கெனவே பலர் நிரூபித்துவிட்டனர். இவை எல்லாம் நிர்வாகக் காரணங்கள். அவற்றை வெளியில் சொல்லிவிடலாம். வெளியில் சொல்லப்படாதது அரசியல் காரணங்கள்தான்.

கடந்த ஆட்சியில், நாம் பயன்படுத்திய ‘திராவிட மாடல்’ என்ற சொல் அனைத்து எதிரிகளையும் ஒன்றிணைத்துவிட்டது. தமிழ்நாடு தவிர, இந்த வார்த்தை இந்த அர்த்தத்தில் எங்கும் புழக்கத்தில் இல்லை. ஒரு எல்லை மாநிலம் இப்படியான ஓர் உறுதியான கொள்கையுடன் வளர்ச்சி பெறுவது இந்தி, இந்து, இந்தியா என்று பேசுவோரைப் பயமுறுத்திவிட்டது.

பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள், அனைவரையும் சங்கடப்படுத்திவிட்டது. குடும்ப அமைப்பே கேள்விக்குள்ளாகும் என்ற கிலி (paranoia) ஆண்களையும் ஆணாதிக்கத்தை உள்வாங்கிய பெண்களையும் உலுக்கிவிட்டது. கல்விக்குக் கொடுக்கப்பட்ட கூடுதல் முக்கியத்துவம், படிப்பில் அக்கறை இல்லாதோருக்கும், முறையான கல்வியில் தோல்வி அடைந்தோருக்கும், படிப்பில் வெற்றி பெற்ற உயர்ஜாதியினருக்கும் சங்கடத்தைக் கொடுத்துவிட்டது. ‘காலை உணவுத்திட்டம்’, எல்லோரையும் படிக்கவைத்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.

தமிழ்நாடு அடைந்திருக்கும் மிதமிஞ்சிய வளர்ச்சி, எல்லோருக்கும் அச்சத்தைக் கொடுத்துவிட்டது. 10 வருடங்களுக்கு முன்பு வரை தமிழர்கள்தான் வெளிமாநிலங்களுக்கு வேலை தேடிப் போனார்கள். இப்போது, வடமாநிலத்தவர் இங்கு பணிபுரிகின்றனர். கல்வியில், மருத்துவத்தில், தொழிலில், வேலைவாய்ப்பில், பொதுக்கட்டமைப்பில் நாம் அடைந்திருக்கும் பிரம்மாண்டமான வளர்ச்சி, ‘திராவிட மாடல் அரசியல்’ இந்தியா முழுக்கப் பரவிவிடுமோ என்ற பயமும் எல்லோரையும் தொற்றிக்கொண்டது.

நவீன தமிழ்நாட்டைக் கட்டிய இயக்கம் இது. இதற்கென்ற கடமை இன்னும் இருக்கிறது. இந்தியாவைப் பார்ப்பனிய ஆதிக்கத்திலிருந்து தேர்தல் வழியில் மீட்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக, பா.ஜ.க.வைத் தோற்கடிக்க முடியாமல் இந்தியா தடுமாறிக்கொண்டிருக்கும்போது, தி.மு.க.தான் பிற கட்சிகளை வழிநடத்த வேண்டும்”என்கிறார் அவர்.

# ஃப்ளாஷ்பேக்



கவிஞர் கண்மணி ராஜாமுகமது



## தமிழ்ச்சமூகத்தின் வீரவாள் கலைஞர்!

2017-ஆம் ஆண்டுவாக்கில், கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் அவர்களைச் சந்திக்க வாய்ப்பு அமைந்த ஒரு இனிய வேளையில், எனது சிறுகதைத் தொகுப்பைக் கையளித்த ‘க்ளிக்’ இது. வாங்கிப் பார்த்தவர், முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்து, ‘என்ன..?’ என்பதுபோல் என்னைப் பார்த்தார். ‘எனது முதல் சிறுகதை நூல்’ என்றதும், மறுபடி புத்தகத்தை இருபுறமும் திருப்பித் திருப்பிப் பார்த்தார். உடல்நலம் குன்றிய நாட்கள் அவை. ‘ஒரு போட்டோ எடுத்துக்கிறேன் அய்யா’ என்றதும், அவரது வழக்கமான புன்சிரிப்பு அமைந்தது. ‘தமிழ்ச்சமூகத்தின் வீரவாள்’ எங்கள் கலைஞருடன் எடுத்த இப்படம், எனது பொக்கிஷங்களில் முதன்மையானது.

**– கவிஞர் கண்மணி ராஜாமுகமது,**
**திரைப்பட கதை–வசனகர்த்தா, சேப்பாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


**115**

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## ஏழ்மையும் இந்தியச் சமூகமும்...

முதலமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட மேடையில் நடிகர் விஜய் பேசியது பெரும் சர்ச்சையைக் கிளப்பியது, “சினிமாவில் எப்படியாவது கஷ்டப்பட்டு வெற்றியடைய வேண்டும் என்றிருந்த ஒரு சாதாரண உதவி இயக்குநருக்குப் பிறந்த பிள்ளை நான். எனக்கு வாழ்க்கையில் வறுமை என்றால் பசி என்றால் என்னவென்று நன்றாகவே தெரியும்” என்று சினமா பாணியிலான ஒரு வசனத்தை அவர் உதிர்த்திருந்தார்.

இதை மறுத்து, அவருடன் லயோலா பள்ளியில் ஒன்றாகப் படித்த மனு ஜோசப் என்ற எழுத்தாளர், தனது சமூக வலைதளப் பக்கத்தில் இதனை சுத்தப் பொய் என்று சுட்டிக்காட்டி எழுதி இருந்தார். குறிப்பாக, ‘வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் பணமில்லாமல் இருப்பதையும் வறுமையையும் குழப்பிக் கொள்கிறார்கள். இரண்டும் அடிப்படையில் வெவ்வேறான விஷயங்கள்’ எனப் பதிவிட்டிருந்தார்.




இவர் இப்படிக் குறிப்பிடக் காரணம், அண்மையில் வெளியான அவரது *‘Why the Poor Don’t Kill Us’* என்ற நூலும் அதன் கருப்பொருளும்தான். மக்கள்தொகை அதிகம் கொண்ட இந்திய ஒன்றியத்தில், அதற்கு இணையாக சமத்துவமின்மையும் அதிகரித்துள்ளது. ஏழை-பணக்காரர்கள் இடையே இருக்கும் பேதம் நாளுக்கு நாள் பல அர்த்தங்களைச் சுமந்து பரிணமித்து வருகிறது, இவற்றை மையமாகக் கொண்டு இந்தியர்களின் உளவியலைப் பகுத்தறிகிறது இந்நூல்.

17 அத்தியாயங்களைக் கொண்ட இந்நூலின் ஒவ்வொரு இயலிலும் பல்வேறு உதாரணங்களுடன் இந்திய உயர் வர்க்கத்தின் பாசாங்குத்தனமும், சுரண்டல் போக்கும் தோலுரிக்கப்பட்டிருக்கிறது. இவை, சமூகம் குறித்த சீரிய விமர்சனங்கள் அடங்கிய கட்டுரைகளாக மட்டும் அல்லாமல், நுட்பமான நகைச்சுவை நிரம்பிய கட்டுரைகளாகவும் எழுதப்பட்டுள்ளது தான் இதன் தனித்துவம்.

சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையை, ஏழ்மை என்பதோடு மட்டும் பொருத்திப் பார்க்காமல், மக்களிடையே இருக்கும் மகிழ்ச்சியின்மை, அது ஏற்படுத்தும் பேராசை, பொறாமை போன்ற குணங்களையும் இத்தகைய குணங்களால் சமூகத்தில் ஏற்படும் அல்லல்களையும் சேர்த்தே நோக்கு கிறது இந்நூல்.

> **சமூகம் குறித்த சீரிய விமர்சனங்கள் அடங்கிய கட்டுரைகளாக மட்டும் அல்லாமல், நுட்பமான நகைச்சுவை நிரம்பிய கட்டுரைகளாகவும் எழுதப்பட்டுள்ளது தான் இதன் தனித்துவம்.**

சமகால இந்தியச் சமூகத்தில் உயர்தட்டு மக்கள், தங்களின் வாழ்க்கையில் சந்திக்கும் மனிதர்களை எப்படி அணுகுகிறார்கள், அவர்களை எவ்வாறு நடத்த முற்படுகிறார்கள் அப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் இந்தியர்களின் கூட்டு உளவியலில் எப்படித் தோன்றி நிலைபெற்றது என்பதை எல்லாம் இந்நூலில், உள்ள பல்வேறு அத்தியாயங்கள் நமக்கு சுட்டிக்காட்டுகின்றன.

உயர்தட்டு மக்களையும், செல்வம் படைத்தவர்களையும் அவர்களால் சமூகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் பேசும் இந்நூலில் சாதி குறித்த விமர்சனம் பெரிய அளவில் வெளிப்படவில்லை. இந்தியாவில் வர்க்க பேதங்களுக்கு அடிப்படையே சாதி பேதம் தான் என்ற உண்மையைப் புறம் தள்ளி இருக்கும் இந்நூலை, அத்தகைய விழிப்புணர்வுடன்தான் நாம் வாசிக்க வேண்டும்.

**...வாசிப்போம்.**

# கருவூலம்

## கல்லக்குடி கொண்டான்!

1969-ஆம் ஆண்டு இறுதியில், டால்மியாபுரம் பெயரை, கல்லக்குடி பழங்காநத்தம் என மாற்றுவதற்கு, உள்துறை அமைச்சர் சவான் ஒப்புதல் வழங்கினார். 1953-இல் கல்லக்குடிப் போராட்டம் நடைபெற்ற நிலையில், 16 ஆண்டுகளுக்குப் பின்னர் கலைஞர் முதலமைச்சரான தருணத்தில், இந்தப் பெயர் மாற்றம் நடைபெற்றதால், தமிழ்நாடே விழாக்கோலம் பூண்டது. கல்லக்குடியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசிய ம.பொ.சி., கலைஞருக்கு ‘கல்லக்குடி கொண்டான்’ பட்டத்தை வழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900